126—

அதிநவீன உயர் சிகிச்சை

***153320—திரு. ஆ. வெங்கடேசன்:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு மருத்துவமனைகளில் அதிநவீன மருத்துவ உபகரணங்கள் மற்றும் சிகிச்சை வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தனியார் மருத்துவமனைகளில் மட்டுமல்ல, இந்தியாவில் வேறு எந்த அரசு மருத்துவமனைகளிலும் இல்லாத அதிநவீன தொழில்நுட்பம் வாய்ந்த கருவிகள், தமிழக அரசு மருத்துவமனைகளில் இன்றைக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அரசு பொறுப்பேற்றவுடன், கடந்த 3 ஆண்டுகளில், பல்வேறு அதிநவீன கருவிகள், குறிப்பாக CT scan, MRI, Dialysis machine, Digital X–ray, Mammogram, Cath Lab, PET–CT scan, *உயர்நிலை* Neuro *நுண்ணோக்கிகள்,* LINAC *கருவிகள்,* Robotic *அறுவை சிகிச்சைக் கருவிகள் என பல்வேறு வகையான அதிதொழில்நுட்பக் கருவிகள் தற்போது தமிழக அரசு மருத்துவமனைகளில் பயன்பாட்டில் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. வெங்கடேசன் அவர்கள்.*

திரு. ஆ. வெங்கடேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைகளில் அதிநவீன மருத்துவ உபகரணங்கள் மற்றும் உயரிய சிகிச்சை வழங்க அரசு ஆவன செய்யுமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.*

2024 ஜூன் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இன்று காலையில்கூட ரூபாய் 13 கோடி செலவில், கலைஞர் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் அதிநவீன Biplane-மூளை இரத்த நாள Cath Lab ஒன்று திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இது இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில்தான் இன்றைக்குப் பயன்பாட்டிற்கு வந்திருக்கிறது. அதேபோன்று, இன்று மதியம்கூட 10 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில், ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, மூளை இரத்த நாள Cath Lab ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது. இதுவும்கூட இந்தியாவிலேயே, அரசு மருத்துவமனைகளில் முதன்முதலில் பயன்பாட்டிற்கு வருகிற மருத்துவக் கருவி. எனவே, அந்தவகையில் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, அதிநவீன தொழில்நுட்பக் கருவிகள் தமிழக அரசு மருத்துவமனைகளில் பயன்பாட்டில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. வெங்கடேசன் அவர்கள்.

திரு. ஆ. வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு மானியக் கோரிக்கை விவாதத்தின்போது அறிவிப்பு செய்த செயற்கை கருத்தரிப்பு (IVF) மையம் மதுரை அரசு இராஜாஜி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் எப்போது முழு செயல்பாட்டிற்கு வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன். மதுரை மட்டுமின்றி தென் தமிழகத்தில் ஏழை, எளிய விளிம்புநிலை மக்களுக்கு இது ஒரு பெரிய வரப்பிரசாதமாக அமையும் என்பதையும் இம்மன்றம் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

[2024 ஜூன் 29

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2022 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்புகளில் சென்னையிலும், மதுரையிலும் செயற்கை கருத்தரிப்பு மையங்கள் தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அந்த வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கடந்த ஜூன் திங்கள் 7 ஆம் தேதி, சென்னை எழும்பூர் அரசு தாய்-சேய் நல மருத்துவமனையில், செயற்கை கருத்தரித்தல் மையம் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் செயற்கை கருத்தரிப்பு மையம் ஒன்று அமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அது மிக விரைவில் தொடங்கி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல் நேற்றைக்கு அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில் ஒன்றான சேலம் மற்றும் கோவையிலும்கூட செயற்கை கருத்தரித்தல் மையங்கள் இந்த ஆண்டு பயன்பாட்டிற்கு வரும் என்பதை மாமன்ற உறுப்பினருக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள்.

திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதிக்குட்பட்டது எருமைப்பட்டி ஒன்றியம். எருமைப்பட்டி ஒன்றியம் 24 ஊராட்சிகளைக் கொண்ட பெரிய ஒன்றியம். அந்த எருமைப்பட்டி ஒன்றியத்திலே ஆரம்ப சுகாதார நிலையம் மட்டும்தான் செயல்பட்டுக்கொண்டு வருகிறது. தலைமை மருத்துவமனைக்கு வர வேண்டுமென்று சொன்னால் நாமக்கல்லில் உள்ள தலைமை மருத்துவமனைக்குத்தான் வரவேண்டும் என்ற ஒரு நிலை இருக்கிறது. 40 கிலோ மீட்டர், 50 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. ஆகவே, எருமைப்பட்டி பேரூராட்சியிலே PHC ஆக செயல்பட்டுக் கொண்டிருக்கிற மருத்துவமனையை GH ஆகத் தரமுயர்த்திக் கொடுக்குமாறு மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

2024 ஜூன் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலைப்பெற்று, எருமைப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம் அவர்கள்.*

திரு. ஆ.மு. முனிரத்தினம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கர் தொகுதியில் அமைந்திருக்கின்ற பொன்னை ஆரம்ப சுகாதார நிலையம் தரமுயர்த்தித் தரப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் துணை சுகாதார நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், வட்டார மருத்துவமனைகள், மாவட்ட அரசு மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், பன்னோக்கு மருத்துவமனைகள் என்று பல்வேறு வகையான மருத்துவக் கட்டமைப்புகள் இருக்கின்றன. அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்ற மக்கள் தொகைக்கேற்பவும், ஒரு மருத்துவமனைக்கும் இன்னொரு மருத்துவமனைக்கும் இருக்கிற இடைவெளிக்கேற்பவும் இந்த மருத்துவமனைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. எனவே, அனைத்தையுமே தரமுயர்த்துவது என்பது சாத்தியமில்லாத ஒன்று என்பதை மாமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 127, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் தாரகை கத்பட், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*